**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.44/19**
**வழக்கு சாட்சி – அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணியம்மாள் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ரங்கசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கெப்புரங்கன்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.24

**(1 முதல் 3, 5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி ஆஜர் இல்லை. 4ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 எனது கணவர். என் கணவர் இறந்து 2 வருடமாகிறது. தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2016ம் வருடம் 6ம் நம்பர் தோட்டத்தில் எங்களுக்கும் அவர்களுக்கும் தகராறு நடந்தது. அந்த நிலத்தை பொறுத்து எங்களுக்குள் கேஸ் நடந்தது. அவர்கள் வண்டியை கொண்டு வந்துநிலத்தை உழுதார்கள். அதை என் கணவர் தடுத்தார்கள். அதற்கு பாண்டியன், தனலட்சுமி, பாண்டீஸ்வரி, சுருளியம்மாள், சந்திரன் ஆகியோர் கம்பால் என் கணவரை அடித்துவிட்டார்கள். அதில் என் கணவருக்கு கையில் காயம் ஏற்பட்டுவிட்டது.அது சம்மந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம்நடந்தது 2016 ஆகும். தேதி , மாதம் ஞாபகம் இல்லை. எனது கணவரை யார் யார் அடித்தார்கள் என்றால் பாண்டீஸ்வரி, பாண்டியன், தனலட்சுமி, சுருளியப்பன், சந்திரன் ஆகியோர் அடித்தார்கள். பாண்டீஸ்வரி என் கணவரை அடித்ததாக போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பாண்டீஸ்வரி பெரியகுளம் ஏஇஓ அலுவலகத்தில் வேலை பார்த்துவருகிறார் என்றால் சரிதான். எதிரிகள் அடித்த பிறகு என் கணவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால்

சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். சண்டை நடந்தன்றே காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் மேற்படி நிலம் சம்மந்தமாக தற்போது வரை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். மேற்படி இடத்தை அபககரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில எதிரிகள் மீது என் கணவர் பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஏற்ப நான் என் கணவருக்கு ஆதவராக பொய் சாட்சி சொல்கிறேன் சரியல்ல. மேற்படி நிலத்தின் சர்வேஎண் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அதை நான் பார்க்கவில்லை என்றாலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவதன்று பாண்டீஸ்வரி அலுவலகத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அன்றையதினம் டிராக்டரை யார் ஓட்டி வந்தது அதன் உரிமையாளர் மற்றும் வண்டி எண் போன்ற விபரங்களை போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றல் சரிதான். என் கணவரை யாரும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.